# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2421 - 2025 ජනවාරි මස 24 වැනි සිකුරාදා - 2025.01.24

2421 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II : சட்டசம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 4 |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக்கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்ற விசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கப{ர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, பெப்புருவரி மாதம் 14ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, சனவரி மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கே.ஜீ. பிரதீப் புஷ்ப குமார,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


3- B 82648 - 403 (2025/01)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

மஹியங்கனை மாவட்ட நீதிமன்றத்தால் பிசுக்கால் அதிகாரியால் மேற்கொள்ளப்படும் பகிரங்க ஏல விற்பனை

இலங்கை வங்கி, தலைமை அலுவலகம்,
இலங்கை வங்கிச் சதுக்கம்,
இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

*-முறைப்பாட்டாளர்-*

வழக்கு இலக்கம்:
MB/02/ 2013
நிறைவேற்று இல.: 05/ 2024

-எதிர்-

விதானகமகே வர்ண திலக் விதானகமகே,
இல. 141, ரணவல , கட்டுகஸ்தோட்ட.

*- பிரதிவாதி -*

"சேராண மூக்கலான" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் திரு.T.B.S.. சாகரன்தெனிய தாயரித்த 2005.07.07 ஆந் திகதிய 5009ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ளதும் கீழே அட்டவணையில் கூறப்பட்டுள்ளதுமான ஆதனம், ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், ரிதீமாலியத்த பிரதேச செயலகத்தின் சேராண கிராம அலுவலர் பிரிவிலுள்ள சேராண கிராமத்தில் அமைந்துள்ளது. குறித்த ஆதனமானது மஹியங்கனை மாவட்ட நீதிமன்றின் மேற்படி வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் என்னால் கையகப்படுத்தப்பட்டு 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி காலை 11.00 மணிக்கு அதே காணியில் வைத்து பிசுக்கால் ஏலவிற்பனையில் விற்கப்படும்.

**ஆதனத்தை அடையும் வழி;-** மஹியங்கனை - பதியத்தலாவ வீதியூடாக 4.5 கி.மீற்றர்கள் பயணிக்கையில் வலது புறமாக அறாவத்த சந்தியை அடைய முடியும். பின்னர் அச்சந்தியிலிருந்து 200 மீற்றர்கள் பயணித்தால் பிரதான வீதியின் வலது பக்கத்தில் குறித்த ஆதனம் இருக்கக் காணலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை;-**

ஏலம் நீக்கப்பட்டதும் 25% செலுத்தப்பட வேண்டும். ( மீதம் 75 % ஐ நீதிமன்றத்தின் கணக்கிற்கு வரவிட, 30 நாட்கள் வழங்கப்படும்.
பிசுக்கால் கட்டணங்கள் ( மொத்த கொள்வனவுத் தொகையின் முதல் 7500 ரூபாவுக்கு 150 ரூபா அத்துடன் மீதமுள்ள ஒவ்வொரு 1000 ரூபாவுக்கு 5 ரூபாப்படி கணிக்கப்பட்டு முழுமையாகச் செலுத்தப்பட வேண்டும்.)
அனைத்துக் கொடுப்பனவுகளும் பணமாக மேற்கொள்ளப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**மேலதிக விபரங்களுக்கும் உரிமைத்துவ உறுதியைப் பார்வையிடுவதற்கும் இலங்கை வங்கியின் பதுளை மாகாண அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.**

தொ.பே. இல. 055-2257280, 0552258195.
தொ.நகல். இல. 0552258330.

**மேலே குறிப்பிட்ட அட்டவணை**

"சேராண மூக்கலான" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் திரு.T.B.S. சாகரன்தெனிய தயாரித்த 2005.07.07 ஆந் திகதிய 5009 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 01 என விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், ரிதீமாலியத்த பிரதேச செயலகத்தின் சேராண கிராம அலுவலர் பிரிவிலுள்ள சேராண கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில்: பதியத்தலாவை பாதை ஒதுக்கத்தையும்; கிழக்கில்:கல்பொத்த ஒதுக்கத்தையும்; தெற்கில்: ஜஸ்ரின் என்பவரால் அனுமதியின்றி அனுபவிக்கப்படும் காணியையும்; மேற்கில்: அரச கட்டடங்களுக்காக ஒதுக்கப்பட்ட காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக் காணி இரண்டு ஏக்கர்கள் (2ஏ.0றூ.0பே.) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளதோடு பதுளை காணிப்பதிவகத்தில் LDO/ RD12/ 173 என்ற இலக்கத்தின் கீழ் பதியப்பட்டுள்ளது.

**குறித்த காணியின் மீளளவை வருமாறு**

"சேராண மூக்கலான" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் திரு.H.M. சந்திரரத்ன தயாரித்த 2010.12.17 ஆந் திகதிய 1185 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 01 என விபரிக்கப்பட்டுள்ள

பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடக்கில்: பதியத்தலாவை பாதை ஒதுக்கத்தையும்; கிழக்கில்:பாறையையும்; தெற்கில்: ஜஸ்ரின் என்பவரால் பயிர்செய்யப்படும் காணியையும்; மேற்கில்: தரிசுக் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு இரண்டு ஏக்கர்கள் (2ஏ.0றூ.0பே.) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தும் கொண்டுள்ளது.

பி. டபிள்யூ . தயாரத்ன,
பதிவாளர் / பிரதி பிசுக்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
மஹியங்கனை.

01-721